NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

வெளிநாட்டுப் பிரயாணம்
திறமையான சேவைக்கும், நம்பிக்கைக்கும், செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ.1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ரெலிபோன்
ரெலக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 8 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஐுல்கஃ பிறை 16 (24-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 212

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

# போராளிகளிடம் யோசனை கோர

# அரசியல் கட்சி மாநாடு தீர்மானம்

### தமிழ் காங்கிரஸ் செயலாளர் குமாரின் பேச்சைத் தொடர்ந்து புதிய திருப்பம்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 24

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களின் யோசனைகளைக் கோருவது என்று அரசியல் கட்சிகள் மாநாடு நேற்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

நாட்டைப் பிரிக்காத முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியதான யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி ஆயுதந் தாங்கிய ஈழம் அமைப்புக்களைக் கோரவேண்டும். இதுவே அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும்.

நேற்று மாலை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த அரசியல் கட்சிகள் மாநாட்டின் இறுதி நாள் அமர்வில் நிறைவேற்றப்பட்ட பிரஸ்தாப தீர்மானம் பெரும் அரசியல் திருப்பம் என்று கருதப்படுகிறது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் திரு குமார் பொன்னம்பலத்தினுடைய உரையைத் தொடர்ந்தே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

சுமார் 2 மணித்தியாலங்கள் நடந்த இம் மாநாட்டில், மேற்கண்ட தீர்மானத்தைத் தயாரிப்பதற்கு அதிகநேரம் செலவழிக்கப்பட்டது

குமார் பேச்சு

திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை சிறையில் நாளை உண்ணாவிரதம்

### 1983 படுகொலைகள் நடந்த கூண்டில்

கொழும்பு, ஜூலை 24

1983 ஜூலையில் இடம்பெற்ற வெலிக்கடைப் படுகொலையை நினைவு கூருமுகமாக வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்லாதமிழ் கைதிகளும் நாளை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

உண்ணாவிரதம், 1983 இல் தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்ட சிறைக் கூண்டுக்குள் தான் நடைபெறும்

தற்போதும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள், அச்சிறைக் கூண்டுகளினுள் தான் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்

உண்ணாவிரதம் இருக்கும் முடிவை தமிழ்க் கைதிகள் நேற்று சிறைச்சாலை உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து தமிழ்க் கைதிகள் உள்ள கூண்டுகளுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் சிலர் தீவிரமாகச் செயல்படுவதை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டித்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

(உ-எ-6)

சுபநேரம்
24—07—1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
07-32 முதல் 09-02 வரை
ராகுகாலம்:
01-32 முதல் 03-02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### கறுப்பு ஜூலை நினைவு நாள்

# வடக்கில் நாளை எதிர்ப்பு தினம்

# பூரண கடையடைப்பு, ஹர்த்தால்

யாழ்ப்பாணம் ஜூலை 24

நாளை வெள்ளிக்கிழமை கறுப்பு ஜூலை நினைவுதினத்தை நினைவு கூரும் விதமாக பூரண கடை அடைப்பு நடத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி பல அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன

நாளைய தினத்தை இனப்படுகொலைக்கு எதிரான எதிர்ப்பு தினமாக அனுஷ்டிக்கும்படியும் அவை வேண்டியிருக்கின்றன.

வர்த்தகர் சங்கம்

நாளை பூரண கடை அடைப்பு நடத்தும்படி யாழ் வர்த்தகர் சங்கம் வர்த்தகர்களைக் கேட்டுள்ளது

1983 ஜூலையில் அரசின் ஒடுக்குமுறை தேசிய அளவிலான இனக்கலவரமாக ஆரம்பித்தது.

அன்று தொடக்கம் இன்றுவரை இலங்கை எங்கும் தமிழரின் உயிர்கள் அநியாயமானமுறையில் கொலைசெய்யப்பட்டு வருகின்றன.

அத்தோடு, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குண்டு வீச்சுக்கள், கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதனால் வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட்ட தமிழ் மக்கள் பலரின் உயிரிழப்புகளும், உடைமைகளும் அழிந்துபோயின. பலர் வாழ வழியற்றவர்களாக, அகதிகளாக நிர்க்கதிக்குள்ளாகியுள்ளார்கள்.

ஆதலால் தொடர்ந்து வரும் இந்த இனப்படுகொலையை ஆட்சே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை பஸ் சேவை இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்-குடா நாட்டில் இ. போ ச. பஸ் சேவைகள் எதுவும் நாளை நடைபெறமாட்டா.

நாளை நகர் எங்கும் இனப்படுகொலைக்கு எதிராக ஊர்வலங்கள் நடைபெறவிருக்கின்றன. ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

அதையொட்டியே பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-10)

முச்சந்தி முரளி



அரசியல் என்டா உப்பிடித்தான். திடீர் திடீர் என்டு திருப்பங்கள், திகைப்புகள் வரும்., சில வேளை மயக்கங்களும் தரும்...!

## கொள்ளை: ஊர்காவலர் கைது

திருகோணமலை, ஜூலை 24

திருகோணமலை ரயில்வே நிலையத்துக்குரிய காசுப்பெட்டி நேற்று இரவு கொள்ளை இடப்பட்டது

இச்சம்பவம் தொடர்பாக 2 ஊர்காவல்படையினர் கைது செய்யப்பட்டு ஆகஸ்ட் இரண்டாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களின் பெயர்கள் வருமாறு: தர்மதாஸ, சிறில் டி சில்வா. (உ-எ-150)

## நொச்சிமோட்டையில் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நேற்று நொச்சிமோட்டைப் பகுதியில் வைத்து கால் நடையாக வந்த சிப்பாய்களை நோக்கி விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தினர்

இதனால் பல சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் பலர் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்று நண்பகல் 12 மணி அளவில் ஓமந்தை இராணுவ முகாமில் இருந்து 200 க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு முஸ்லிம்களுக்கு நேற்று மரணதண்டனை

### விடுதலைப் புலிகள் விதித்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

முஸ்லிம் இளைஞர் இருவருக்கு நேற்று மரண தண்டனை வழங்கப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகள் இருவருக்கும் இத்தண்டனையை வழங்கினர்.

மஜீத் நபீஸ் (வெள்ளை) (18 வயது) — முகமட் ஜலீல் (24 வயது) ஆகிய இருவருக்குமே மரண தண்டனை வழங்கப்பட்டது

நேற்று அதிகாலை சுமார் 2 30 மணியளவில் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் வைத்து இவர்கள் இருவரும் சுடப்பட்டனர் என்று அறியவந்தது

கடந்தமாதம் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் ஷெல் தாக்குதல்:

## சிப்பாய்கள் வெளியே வரும் முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று நள்ளிரவு சிப்பாய்கள் வெளியே வர எடுத்த முயற்சி விடுதலை புலிகளினாலும் தமிழீழ இராணுவத்தினாலும் முறியடிக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவு 12 மணி அளவில் யாழ் கோட்டை முகாமில் இருந்தும், பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்தும் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் மீனாட்சி அம்மன் கோவில் பக்கமாக வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் வருகையை அடுத்து உஷார் அடைந்த விடுதலைப் புலிகளும் தமிழீழ இராணுவமும் சிப்பாய்களை எதிர்த்து தாக்குதல் நடத்தினர்.

மோட்டோர் ஷெல் தாக்குதலும் மேற் கொள்ளப்பட்டது.

தாக்குதலை அடுத்து சிப்பாய்கள் அனைவரும் பொலிஸ் விடுதிக்கும், கோட்டைக்கும் திரும்பினர்.

சம்பவத்தின்போது சில சிப்பாய்கள் காயமடைந்திருக்கலாம் என நம்பப்பட்டது.

(இ-10)

## நகரில் விழுந்த ஆட்டிலறி ஷெல்

## 3 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நாச்சிமார் கோயிலடியில் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று அதிகாலை "ஆட்டிலறி ஷெல்" தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் கோட்டை முகாமிலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நாச்சிமார் கோயிலடியில் வீடு ஒன்றும், நகரில் "அசோக" ஹோட்டலும் பலத்த சேதமடைந்தன.

நேற்று அதிகாலை 1 30 மணி அளவில் முதல் தடவையாக யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து 'ரொக்கட்' போன்ற அமைப்பு உடைய 'ஆட்டிலறி ஷெல்'கள் நகரை நோக்கி தீர்க்கப்பட்டன.

ஷெல்கள் விழுந்து வெடித்தபோது பாரிய சத்தங்கள் ஏற்பட்டன. அதனால் பொதுமக்கள் பயமும் பீதியும் அடைந்தனர்.

நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக உள்ள எஸ் ஜன்னராசா என்பவருடைய வீட்டிற்கு மேலேயே ஷெல் விழுந்து வெடித்தது.

இதனால் வீட்டின் ஓடுகள் பொருள்கள் சேதமடைந்தன.

ஹோட்டல் அசோக வளவினுள்ளும் ஒருஷெல் விழுந்து வெடித்துள்ளது.

இதனால் ஹோட்டல் முன்பக்கமாக உள்ள விலை உயர்ந்த கண்ணாடிகள் அனைத்தும் உடைந்து நொருங்கியுள்ளன.

இரவு நேரத்தில் பயங்கரமான "ஆட்டிலறி ஷெல்" ஏவப்பட்டதால் நகரில் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் பதற்றமும் பீதியும் அடைந்தனர்.

(உ-10)

## நிலக்கண்ணி வெடி தேடி 50 மைல் தூரம் அலைவு!

### ஆனால் பலன் ஏதும் இல்லை

திருகோணமலை, ஜூலை 24

நிலக்கண்ணி வெடி புதைக்கப்பட்டுள்ளது என்ற வதந்தியைத் தொடர்ந்து திருகோணமலை கண்டி வீதியில் 50 மைல் தூரம் ஆயுதப் படையினரால் பலத்த சோதனை இடப்பட்டது.

இதனால் திருகோணமலை நகருடனான வாகனத் தொடர்புகள் நேற்று நண்பகல் வரை தடை செய்யப்பட்டன.

நகரில் இருந்து வாகனங்கள் எதுவும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை, நகரினுள் வரவும் அனுமதிக்கப்படவில்லை.

திருமலையில் இருந்து ஹபரணைவரை உள்ள தூரமே இப்படிச் சோதனை இடப்பட்டது

ஆனால் நிலக்கண்ணி எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெறும் அலைச்சல் தான் மிஞ்சியது

சோதனையின்போது ஹெலிக்கொப்டர் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. (உ-எ-150)

## சிறிமா கூட்டணியினர் இன்று சந்திப்பு

கொழும்பு, ஜூலை 24

இன்று காலை கூட்டணித் தலைவர்கள் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரின் ரோஸ்மீட் இல்லத்தில் சந்திக்கின்றனர்.

கூட்டணித் தலைவர்கள் இந்தியா திரும்பும் முன்னர் கடைசியாக சந்திக்கப் போகும் அரசியல் கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்காதான்.

(உ-எ-8)

## வவுனியாவில் குண்டு வெடித்து 10 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வவுனியா நகரில் நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்ததில் வர்த்தக நிலையம் ஒன்று சேதமடைந்தது.

வர்த்தக நிலைய உரிமையாளர் உட்பட பத்துப் பேர்வரை காயமடைந்தனர்.

முகாந்திரம் தர்மலிங்கம் வீதியில் உள்ள கடை முன்னால் தான் காலை 11 மணியளவில் குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் உள்ள கடைகள் மூடப்பட்டன. இராணுவ ரோந்து நடைபெறுகிறது. பொலிஸார் வந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம்: விஜேயை முயற்சிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஜூலை 24

யுத்த நிறுத்தமா? நீங்களே முயற்சி செய்து பாருங்கள் இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஸ்ரீலங்கா மகஜன கட்சி செயலாளர் திரு. விஜய குமாரணதுங்காவுக்குச் சொன்னார்.

நேற்று நடந்த அரசியல் கட்சிகள் மாநாட்டில் யுத்தநிறுத்தம் அவசியம் என்று திரு விஜய குமாரணதுங்கா சொன்னார்

அதற்குப் பதிலளிக்கையில்தான் ஜனாதிபதி, "யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவர நீங்கள் முயற்சிசெய்து பாருங்கள்" என்று திரு குமாரணதுங்காவிடம் தெரிவித்தார். (த-எ)

## தமிழ் அமைப்புக்களுடன் பேச்சு நடத்தி முடிந்த பின்னரே சிபார்சுகள் அமுல்

கொழும்பு, ஜூலை 24

தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழர் அமைப்புக்களுடனான பேச்சுக்களை முடித்த பின்னர் ஐந்து குழுக்களின் சிபார்சுகளையும் அமுல் நடத்தும்படி அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்று நேற்று நடந்த அரசியல் கட்சிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைக்கு எதிரான எதிர்ப்பு நாள்

## நாளை அனுஷ்டிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 24

'தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு இனப்படுகொலைக்கு எதிரான எதிர்ப்பு நாளை வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கிறது.

வட பிரதேச கூட்டுக்குழுவில் இணைந்துள்ள பதினைந்து தொழிற்சங்கங்கள் இது சம்பந்தமாக வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தின் விவரம் வருமாறு:

சாதாரண தமிழ் பேசும் மக்கள் இராணுவத்தினராலும் ஊர்காவற் படையினராலும், காடையர்களினாலும் சென்முறையின்றிக் கொல்லப்படுவது நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டது.

அத்தோடு விமானக் குண்டுவீச்சுகளும் கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை 5,500க்கு மேற்பட்ட சாதாரண தமிழ்க்குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பல்லாயிரம் பேர்.

வீடெரிப்புக்கள், சூறையாடல்கள், கற்பழிப்புக்கள் தொடர்கின்றன.

இனப்படுகொலையை ஆட்சேபித்து தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் நாளை வெள்ளிக்கிழமை எதிர்ப்பு நாள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அன்றையதினம் காரியாலயங்கள் மூடப்படும். ஊழியர்கள் வேலைக்குச் செல்லமாட்டார்கள். போக்குவரத்து நடைபெறாது. வர்த்தக நிலையங்கள் கதவடைப்பை மேற்கொள்ளும். பாடசாலைகள் நடைபெறா.

அன்று மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கு முகமாக ஒவ்வொரு தொகுதியிலும் இணைப்புக்குழு ஏற்பாடு செய்யும் இடங்களில் எதிர்ப்புக்கூட்டங்கள் நடத்தப்படும்.

இவ்வாறு அந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# அராலி இறங்கு துறையில் நிரந்தர தங்கு மண்டபம்

வேலணை, ஜூலை 24

தீவுப்பகுதி மக்கள் தற்பொழுது பிரயாணத்தை மேற்கொண்டு வரும் அராலி இறங்குதுறையின் இருமருங்கிலும் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கான நிரந்தர தங்குமண்டபம் ஒன்றைக் கட்டுவதற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

இரண்டொரு மாதங்களில் மழைக்காலம் வருவதால் தங்குமண்டபம் அவசியம் என்று கருதப்படுகின்றது.

இம்மண்டபத்தை அமைப்பதற்கு மக்கள் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள் கல்விமான்கள், சமூக சேவை மன்றங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் உதவியை இவர் கோரியுள்ளார். (இ)

# வல்வெட்டித்துறைச் சம்பவம் பற்றி ஜனாதிபதியிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வல்வெட்டித்துறைப் பகுதியில் இம்மாதம் 14 ஆம் திகதி இராணுவத்தினரின் வன்செயல் நடவடிக்கையால் ஒருவர் பலியானார். ஆறுபேர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். இதனால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இவ்வாறு வல்வெட்டித்துறை பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன் பிரதிகள் அரச அதிபருக்கும் மனித உரிமைகள் இயக்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை பிரசைகள் குழுத் தலைவர் திரு கே இ திருநாவுக்கரசு ஒப்பமிட்டுள்ள இந்த அறிக்கையின் விவரம் வருமாறு.

இம்மாதம் 14 ஆம் திகதி காலை 6-30 மணிக்கு ஆரம்பமான ஆயுதப் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் பிற்பகல் 11.00 மணிவரை நீடித்தன.

குடிசனம் மிகுந்த பகுதிகளில் இவர்களின் தாக்குதலைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் சூடும் கடலிலிருந்து ஷெல் குண்டுத் தாக்குதலும் இடம்பெற்றன.

அதிகாலையில் தமது வயலுக்குச் சென்றுகொண்டிருந்த இவ்வூர் பிரசையான சண்முகராசா (55 வயது) என்பவரை துவக்கால் சுட்டுக் கொலை செய்ததைத் தொடர்ந்து ஆயுதப் படையினரின் அட்டகாசம் ஆரம்பமானது.

இவரது கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் சடலமாக பொது மக்களால் மீட்கப்பட்டது.

சடலத்தில் சித்திரவதைக்குள்ளான காயங்களும், வாய்க்குள் துவக்கு வைத்து சுட்ட காயமும் காணப்பட்டன.

இராணுவத்தினரின் அன்றைய அட்டகாசத்தால் பின்வருவோர் காயமடைந்தனர்.

குழந்தைவேல் கதிர்காமத்தம்பி (66 வயது) வல்வெட்டித்துறை

சிவநாதன் சிவதயாளன் (20 வயது) வல்வெட்டித்துறை.

கந்தசாமி ஸ்ரீ (43 வயது) வல்வெட்டித்துறை

வைத்தியலிங்கம் (65 வயது) கம்பர்மலை.

சசிகலா (12 வயது) கம்பர்மலை.

இராணுவத்தினரின் வன்செயலால் பல வீடுகளும் சேதமடைந்தன.

ஆகவே மேலும் இத்தகைய செயல்கள் நடைபெறுதிருக்க ஆயுதப் படையினரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருக.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-எ)

## முஸ்லிம்இளைஞன் சடலமாக மீட்பு

குருநாகலை, ஜூலை 24

பெரிய கிண்ணியாவைச் சேர்ந்த முகமது கல்தான் முகமது பாரூக் என்ற இளைஞனின் சடலம் வாஞுறு என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

பால் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இந்த இளைஞன் சென்ற 17 ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருந்தான். நேற்றுத்தான் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (உ-எ-150)

# அவசர தேவைகளுக்கு இரத்தம் வழங்க தொண்டர் திரட்டப்படுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

அவசர தேவைகளின் போது உடன் இரத்தம் வழங்கக்கூடிய தொண்டர்களைத் திரட்ட யாழ் வைத்தியசாலை இரத்த வங்கி தீர்மானித்துள்ளது.

அசம்பாவிதங்கள் நடைபெறும் சமயங்களிலும், ஆபத்தான கட்டத்திலுள்ள திடீர் நோயாளிகளுக்கும் சில சமயங்களில் இரத்தம் உடன் கிடைப்பதில்லை.

இதனால் தொண்டர்களை முன்கூட்டியே பரிசோதித்து வங்கியில் பதிவு செய்து வைத்திருக்க வங்கி தீர்மானித்துள்ளது.

ஆபத்து, அவசரநேரங்களில் உடன் இவர்கள் அழைக்கப்பட்டு இரத்தம் பெறப்படும்.

உடன் பிறப்புக்களின் உயிர்காக்கும் கடமை உணர்வுள்ளவர்கள் உடன் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கிக்கு பொறுப்பான டாக்டர் செல்வி. பா. ஆறுமுகம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

## சேதமடைந்த கடைகள் வீடுகள்

யாழ்ப்பாணம் ஜூலை 24

யாழ் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களின் போது சேதமாக்கப்பட்ட வீடுகள், கடைகள் விவரம்:

1. கடாபி ஹோட்டல் காதி அபூபக்கர் வீதி
2. மஜீத் பல சரக்குக் கடை காதி அபூபக்கர் வீதி
3. எஸ் எம். பாறூக் பூஸ், மக்காம் ரோட்
4. என் நஸீர் ஆஸாத் ரோட்
5. எம் இலீஸ் ஆஸாத் ரோட்
6. அக்பர் ஹாஜியார் ஆஸாத் ரோட்
7. யூனைதா ரீச்சர் ஆஸாத் ரோட்

இவற்றைவிட மேலும் இரண்டு வீடுகள் சேதமாக்கப்பட்டன. (இ-10)

## முதலாம் பரிசு பெற்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 24

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1985 இல் நடத்திய அமைப்பாளர்களுக்கு இடையிலான போட்டியில் திரு. சரவணமுத்து சண்முகராஜா வடமாகாணத்திலே முதலாவது பரிசைப் பெறும் தகுதியைப் பெற்றுக்கொண்டார்.

இவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவரும், யாழ்/பரமேஸ்வராக் கல்லூரியினதும், யாழ்/தொழில்நுட்பக் கல்லூரியினதும் பழைய மாணவரும் ஆவார் (இ)

மக்கள் முகம்



## விடுகள் தகர்ப்பு என முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வல்வெட்டித்துறை இராணுவ முகாமை அண்டிய பகுதிகளிலுள்ள வீடுகள் சீருடையினரால் தகர்க்கப்படுகின்றன.

ஊரிக்காடு பக்கமாக உள்ள வீடுகளே பெருமளவு தகர்க்கப்படுகின்றன.

இது பற்றிய முறையீட்டை வல்வெட்டித்துறை பிரசைகள் குழு அரச அதிபருக்கும் பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுவுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (இ-5)

## சைக்கிள் களவு: சந்தேக நபர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம் ஜூலை 24

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கடந்த சில நாட்களாகத் திருட்டுப் போன சைக்கிள்கள் சம்பந்தமாக சந்தேகத்தில் ஒருவர் பிடிபட்டார்.

இவரிடம் இருந்து ஒரு சைக்கிள் மீட்கப்பட்டது.

இவர் ஓர் ஆஸ்பத்திரி ஊழியர் என்றும் இவரை விசாரணைக்கு உட்படுத்தி அதிகாரிகள் உடனடியாக தற்காலிக வேலைநீக்கம் செய்தனர் என்றும் தெரியவருகிறது (இ-10)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

தற்போதைய யோசனை அடிப்படையில்

# உடன்பாடு ஏற்பட்டால் அதை சுதந்திரக்கட்சி எதிர்க்கும்

## அநுரா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 24

தற்போதையயோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் கூட்டணியுடன் உடன்பாடு கண்டால், அந்த உடன்பாட்டை ஜனநாயக முறைகளில் சுதந்திரக்கட்சி எதிர்க்கும்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

திரு. அனுராபண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:

1956 இல் எனது தந்தை பிராந்தியசபையின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வை ஆதரித்தார்.

இன்றைய சூழ்நிலையில் அன்று சொன்னதை நினைவு படுத்துவது அவருக்குச் செய்யும் பாதகமாகும்.

இன்றைய மாகாண சபைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வில் அரைவாசி கூட பண்டா—செல்வா ஒப்பந்தத்தில் வழங்கப்படவில்லை.

அன்று யு என் பி. அந்த உடன்பாட்டை எதிர்க்காமல் விட்டிருந்தால் இன்று நிலைமையே வேறாக இருந்திருக்கும்.

சுதந்திரக்கட்சியும் அரசியல் தீர்வைத்தான் விரும்புகின்றது ஆனால் பெரும்பான்மையினரின் நலன்களை விற்கும் அரசியல் தீர்வைக்காண விரும்பவில்லை.

வடக்கு பூரணமாக தீவிரவாதிகளின் கையில் உள்ளது. கிழக்கில் 50 சதவீதம் அவர்களின் கையில்தான் உள்ளது. இப்படி ஜனாதிபதியே கூறியிருக்கின்றார்.

இந்த நிலையில் அதிகாரப்பகிர்வில் ஈடுபட்டால் தனிநாட்டைக் கொடுப்பதில்தான் முடியும். தமிழர் ஈழத்திற்கான முதல் படி இதுதான்.

பொலிஸ் படைக்கு உதவி பொலிஸ் அதிபர் பதவி வரையான ஆள் திரட்டும் அதிகாரம் முதலமைச்சருக்கு வழங்கப்பட்டால் வடக்கு, கிழக்கில் உள்ள பொலிஸ் படைகளில் 80 சதவீதமானோர் தீவிரவாதிகளாகவே இருப்பர்.

மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படின் தனிநாடு அமைக்கப் பட்டதாகவே முடியும்

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா கூறினார்.

இலங்கை மண்ணில் கால் வைத்தால் திரு. அமிர்தலிங்கத்தைக் கைது செய்யவேண்டும் என்று முன்னர் கூறினீர்களே! இப்போது அதை ஏன் வலியுறுத்தவில்லை என்று கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் திரு. அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

தமிழரை அழிவில் இருந்து காப்பாற்றத் தலையிடும்படி இந்தியாவை திரு அமிர்தலிங்கம் கேட்டபோதுதான் நான் அந்தக் கோரிக்கையை விடுத்தேன். எனது அந்தக் கருத்து இன்னும் மாறவில்லை.

இப்போது அமிர்தலிங்கம் பேச்சுக்கள் நடத்த வந்திருக்கின்றார். பேச்சைக் குழப்ப நான் விரும்பவில்லை.

அரசாங்கத்திலும் செல்வாக்குமிக்க பிரிவுகள் அமைதியாக உள்ளன. மாகாண யோசனைகள் குறித்து அரசாங்கத்தில் ஒற்றுமை நிலவுகிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (இ-ஈ)

யாழ் நகர மக்களுக்கு!

அரிய சந்தர்ப்பம்!!

உதயனின் உதய சேவை

அதிகாலையில் கடைக்குப்போய் பத்திரிகை வாங்க நேரத்தைச் செலவிடாதீர்!

உதயனின் உதய சேவையில் பதிவு செய்து வீட்டில் இருந்தவாறே உதயன், சஞ்சீவி படிக்கலாம்.

உடன் சந்தாதாரராகுங்கள்!

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அதிகாலையில் வீடுகளுக்குப் பத்திரிகை விநியோகிக்கும் சேவையை நாம் ஆரம்பித்துவிட்டோம்.

நீங்களும் சந்தாதாரராகிப் பதிவு செய்தால் வீண் சிரமமின்றி உதயனையும் சஞ்சீவியையும் வீட்டில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளுங்கள்;

விநியோகப் பகுதி,
'உதயன்',
த பெ எண்: 23,
யாழ்ப்பாணம்

## தேடிச் சென்றவரும் திரும்பவில்லை

பலாலி, ஜூலை 24

இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடுவிக்கப்படாத ஒருவரை விடுவித்து அழைத்துவர வவுனியா சென்ற ஒருவர் இரண்டு வாரங்களாகியும் வீடு திரும்பவில்லை.

அச்சுவேலியைச் சேர்ந்த திரு சி. சிவஞானம் என்ற சிறிய வியாபாரியே காணாமல் போனவராவார்

இதுபற்றி அவரின் உறவினர்கள் அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர். (இ-119)

## சேதம்

யாழ்ப்பாணம் ஜூலை 24

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ்கள் சிலவற்றை ஆனையிறவில் வழிமறித்து சீருடையினர் அவற்றின் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (இ-10)

## சுன்னாகம் எரிந்த சந்தைக் கட்டடம் விரைவில் பூர்த்தி

உடுவில், ஜூலை 24

சுன்னாகம் எரிந்த சந்தைக் கட்டடம் ஒரு மாதத்தில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுவிடும். அதன் கூரை வேலைகள் இப்போது நடைபெறுகின்றன.

யாழ் உள்ளூராட்சி ஆலுவலக செயலாளர் சுன்னாகம் பிரசைகள் குழுவுக்கு மேற்கண்டவாறு உறுதி அளித்துள்ளார்.

1983ஆம் ஆண்டு அரச படைகளால் எரிக்கப்பட்ட சுன்னாகம் சந்தைக் கட்டடம் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் திருத்தப்படாமல் இருப்பது குறித்து பிரசைகள் குழு உள்ளூராட்சி அலுவலகச் செயலாளரிடம் புகார் செய்திருந்தது.

அதற்குப் பதிலளித்து அனுப்பிய கடிதத்திலேயே செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கொல்கள கட்டடமும் மூன்று மாதத்தினுள் முடிவடைந்துவிடும் எனவும் அவரது பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்கும் - இறைச்சிக்கடையும் கொல்கள கட்டடம் கூடிய விரைவில் முடிக்கப்பட வேண்டிய தன் அவசியம் குறித்து பல தடவைகள் பொது மக்கள் மேலிடத்துடன் தொடர்பு கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (இ-27)

பொதுமக்களால் தெரிவிக்கப்படும்

## மினிபஸ் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும்

### சங்கச் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மினிபஸ் சேவை சம்பந்தமாக எழும் பிரச்சினைகளை பொதுமக்கள் தெரிவித்தால் அவற்றை தீர்த்து வைக்க உடனுக்குடன் நடவடிக்கை எடுப்போம்.

இப்படி வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கச் செயலாளர் திரு. இ. செல்வராசா தெரிவித்தார்.

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கங்களின் பஞ்சாயத்துச் சபைத் தேர்தல் கடந்த சனிக்கிழமை நடந்தது.

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பொன். மதிமுகராசா பேசுகையில்,

சிவில் நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் இந்த நிறுவனம் பிரதிபலன் பாராது மக்களுக்குச் சேவை ஆற்றி வருகின்றது — என்று குறிப்பிட்டார். (இ-எ)

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவம் ஆகஸ்ட் 5 ஆம் திகதி

வேலணை, ஜூலை 24

போக்குவரத்துச் சீர்குலைவு காரணமாகவும் நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாகவும் ஒத்தி வைக்கப்பட்டிருந்த நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

இவ் ஆலய வருடாந்த உற்சவங்கள் சம்பந்தமாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் யாழ் செயலகத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்ட முடிவின் பிரகாரமே இம்முடிவு எடுக்கப்பட்டது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவ தினங்களில் கலந்து கொள்பவரும் யாத்திரிகர்களின் பாதுகாப்பு வசதிகருதி யாழ் அரசாங்க அதிபர் யாழ் மாவட்ட இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பார்

யாத்திரிகர்களின் போக்குவரத்து பாதுகாப்புக் கருதி உற்சவங்களை நேர காலத்திற்கு முடிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆலயத் திருவிழாக் காலங்களில் கலந்து கொள்ள வரும் வெளியூர் யாத்திரிகர்களின் நன்மை கருதி படகுச் சேவைகள், சுகாதாரச் சேவை, பாதுகாப்புச் சேவை, குடி தண்ணீர் வழங்கல் போன்றவற்றை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்பது பற்றியும் ஆலய உற்சவ சம்பந்தமாக செய்யப்பட வேண்டிய ஒழுங்குகள் பற்றியும் ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று நாளை 25 ஆம் திகதி நயினாதீவு நாகபூஷணி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார். (இ)

## இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இன்னிசைக் கச்சேரியில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு திரு எல். திலகநாயகம் போல் அவர்களின் இசைக்கச்சேரி நடைபெறும் (இ)

## பஜனைச் சபை மனனப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நிலைபக்குரல் ஆதரவில் வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையார் நடத்திய ஒளவையார் அருளிய வினாயகர் அகவல் மனனப் போட்டியில் நாற்பத்தெட்டுப் பேர்கள் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

சுழிபுரம் பறுளை ஈஸ்வர விநாயகர் உற்சவ தினத்தை யொட்டி நடத்திய இப்போட்டியில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கு கொண்டனர்.

இவர்களுக்குரிய பரிசுகள் விரைவில் வழங்கப்படும். (இ)

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க அறிவித்தல்

தமிழ் பேசும் இனம் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து இம்மாதம் 25ஆம் திகதியை எதிர்ப்புத் தினமாக அனுஷ்டிக்கும் வண்ணம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக எமது சங்க அங்கத்தவர்கள் கடந்தகால ஹர்த்தால்களில் எப்படி நடந்துகொண்டீர்களோ அதே போல் நடந்து இந்த எதிர்ப்புத் தினத்தை வெற்றியளிக்க உங்கள் பங்களிப்பை வழங்குமாறு கோருகின்றோம்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்.
இ.த.ஆ. சங்கம்.

இ.த.ஆ.ச.
தலைமைப் பணிமனை,
29, ஜும்மா பள்ளி வீதி.
யாழ்ப்பாணம்,
23-7-86.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உலகமாக உலகம் முழுவதுமே மாறுது நீதான் உன்னையே மாற்றிக் கொள்ள வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

உதயன்

இல. 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
24-07-86 த.பெ. 23

## கூட்டுறவுத் துறையின் தளர்ச்சியும் மலர்ச்சியும்

கூட்டுறவுத் துறையின் அவசியத்தை, முக்கியத்துவத்தை மக்கள் இப்போது பெரிதும் உணர்ந்துள்ளனர்.

சுன்னாகத்தில், அங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உப விற்பனவு நிலையம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டது. அந்த வைபவத்தில் பேசுகையில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. சே. இராமநாதர் முன் கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவுத் துறைக்குப் புகழ்பெற்ற இடமாக, முன் உதாரணமாக விளங்கும் இடமாக யாழ்ப்பாணம் முன்னொரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது

அரை நூற்றாண்டுக்கு முன்னரே கூட்டுறவுத் துறையில் அதிக நம்பிக்கையும், நாட்டமும் உள்ளவர்களாக வடபகுதி மக்கள் விளங்கினர்

ஆஸ்பத்திரிகள் மற்றும் சமூக நல நிலையங்களை நடத்தும் அளவுக்கு கூட்டுறவுத்துறை யாழ்ப்பாணக் குடாநாட்டில் கீர்த்தி பெற்று விளங்கியது.

ஆலயம், பாடசாலை ஆகியனவ தமிழர் சமூக வாழ்வில் ஒன்றித்து விளங்கியது போலவே கூட்டுறவும் மிக முக்கிய இடத்தை வகித்து வந்தது

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் அதன் அவசியம் மேலும் உணரப்பட்டு வளர்க்கப்பட்டது மக்களுக்கு உண்மையான சேவையும் கிடைத்தது.

ஆனால் இடைப்பட்ட காலங்களில் அரசாங்கங்களின் கொள்கை மாற்றங்களாலும், நடைமுறை மாற்றங்களாலும் கூட்டுறவுத்துறை சிறிது தேய்ந்து போகலாயிற்று.

உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு அல்லது பங்கீட்டு முறை வரும்போது கூட்டுறவுச் சங்கங்களை மக்கள் நாடுவர்.

தனியார் துறைக்குச் சாதகமான தாராள இறக்குமதிக் கொள்கை நடைமுறைக்கு வரும்போது கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் மறந்து விடுவது உண்டு.

அதனால் கடந்த இருபது வருட காலத்தில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியும், செல்வாக்கும் ஏற்ற இறக்கம் கண்டிருக்கின்றன

கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிச்சையாக இயங்க முடியாதவாறு உள்ள சில கட்டுப்பாடுகளும் அவை தளர்ச்சி நிலை அடைவதற்குச் சில காரணங்கள் ஆகும். தனியார் துறையுடன் போட்டி போட்டு இயங்க முடியாத அளவுக்கு நிதிக் கட்டுப்பாடுகள் தடுப்பதும் உண்டு.

அவை மட்டுமன்றி கூட்டுறவுச் சங்கங்கள் அனேகமாக அரசாங்க ஸ்தாபனங்களாக மாற்றம் அடைந்து வருவதால் அவை இலாபகரமாக இயங்க முடியாத சங்கட நிலையும் உண்டு.

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தைக் கைப்பற்றுவோரின் ஊழல், மோசடி நடவடிக்கைகளும், ஊழியர்களின் ஆகாத செயல்களும் பல சந்தர்ப்பங்களில் கூட்டுறவுத் துறையில் இருந்து மக்களைத் தூரத்தே விலக்கி வைக்கக் காரணங்களாக இருந்ததும் உண்டு. இருசாராரும் சில வேளைகளில் இரண்டு கால் எலிகளாக மாறுவதையும் மறப்பதற்கில்லை.

காரணங்கள் எதுவாயினும் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு இயங்குவது அவசியம். அதே அளவுக்கு அவை இலாபகரமாக இயங்கக் கூடிய நிறுவனங்களாகவும் மாற வேண்டும். அதற்கேற்ற விதத்தில் இப்போதுள்ள நிதி, நிர்வாக விதிகளில் மாற்றம் தேவை.

கூட்டுறவு இயக்கங்கள் கட்டுப்பாடு, தட்டுப்பாடு நிறைந்த காலங்களில் மட்டுமின்றி, எல்லா வேளைகளிலும் தலைநிமிர்ந்து இயங்கக் கூடிய தன்மை வளரவேண்டும்; வளர்க்கப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் வெறும் உணவுப் பொருள் விநியோக அமைப்புக்களாக அன்றி விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் உற்பத்தித் துறைகளில் ஈடுபடலாம். அவ்வாறு செய்வதன் மூலம் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புப் பெருக்கத்துக்கும் உதவ முடியும்.

கூட்டுறவுச் சேவைக்கு என்று வருபவர்கள் சுயநல தேவைக்கு என்று இல்லாமல் மக்கள் சேவைக்கு என்று உழைக்க வேண்டும்.

அப்போதுதான் கூட்டுறவுத்துறை காலத்துக்குக் காலம் நாடப்படும் இடமாக அன்றி தொடர்ச்சியாக மக்கள் சேவைத் துறையாக உயர முடியும் — மலர்ச்சி அடைய இயலும்.

## மாணவருக்கு குருபக்தி அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மாணவர்கள் குருபக்தி உள்ளவர்களாகத் திகழவேண்டும்.

யாழ் இளையதம்பி இந்து வித்தியாலய மணிவாசகர் குருபூசை விழாவில் அதிபர் திரு. கா. கணேசதாசன் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் செல்வி. கே சரஸ்வதி ஆசிரியை தலைமையில் விழா நடைபெற்றது. பழைய மாணவி செல்வி நவினியின் இன்னிசை நிகழ்ச்சியும் செல்வி ஜி. மனோகரியின் சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெற்றன. மாணவி சி. சுதர்சினி நன்றிகூறினார் (இ)

சீனு, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை

# அயல்நாட்டு உறவுகள்

# மீள் பரிசீலனை

## இந்திய அரசு நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 23

அண்டை நாடுகளுடனான தனது உறவுகளை மீள் பரிசீலனை செய்வதில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது

புதுடில்லி அரசு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

சீனு, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளுடன் வருங்காலத்தில் என்ன மாதிரியான ராஜதந்திர உறவுகளை வைத்துக்கொள்வது என்பது குறித்த புதிய திட்டம் ஒன்றை இந்திய வெளியுறவு அமைச்சு வகுத்து வருகிறது.

தமிழர் பிரச்சினை காரணமாக இந்திய — இலங்கை உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது

இதனைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிரான சர்வதேச சக்திகள் இலங்கையைக் களமாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. இது இந்தியாவுக்குக் கவலையைக் கொடுத்து உள்ளது.

இரண்டு வல்லரசுகள் நேரடியாக இலங்கையுடன் சம்பந்தப்படாவிடினும் தமது ஆதரவு நாடுகள் மூலம் இலங்கைக்கு உதவி வருகின்றன.

இதுவும் இந்தியாவின் அண்டை நாட்டுக்கொள்கைகளை மீள் பரிசீலனை செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது

இப்படி புதுடில்லி அரசு அதிகாரிகள் கூறுகின்றனர் (இ-எ-2)

## மிஸோராம் செல்லும் மந்திரிகள் குழு

ஐசாநகர், ஜூலை 23

மிஸோராம் பிரதேசத்தின் வளர்ச்சித் தேவைகளை நேரில் கண்டறிந்து மதிப்பீடு செய்வதற்காக ஏழு மத்திய மந்திரிகள் அடங்கிய குழுவொன்று மிஸோராம் செல்லவுள்ளது.

இம் மாத முற்பகுதியில் மிஸோராம் பகுதியில் சுற்றுப் பயணம் செய்த திரு. ராஜீவ் காந்தி அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த குழுவின் பயணம் அமையும்.

மிஸோ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றி இக்குழு ஆராயும். (இ-ஒ)

# தென் ஆபிரிக்க பிரச்சினைக்கு முடிவு காண தட்சர் விருப்பம்

லண்டன், ஜூலை 23

தென் ஆபிரிக்காவில் பல காலமாக இருந்து வரும் இன ஒதுக்கல் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண விரும்புவதாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் தெரிவித்தார்

நேற்று காமன்ஸ் சபையில் இத்தகவலை அவர் வெளியிட்டார்

தென் ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியின் முதற்கட்டமாக பிரதமர் திரு பி டபிள்யூ. போத்தாவைச் சந்தித்து விரிவாகக் கருத்துப் பரிமாறவிருப்பதாக தட்சர் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவில் பெரும்பான்மையான மக்களின் துயரங்கள் துடைக்கப்படவேண்டும் என்பதில் பிரிட்டன் ஆர்வம் கொண்டுள்ளது.

அதற்காக பிரிட்டோரியா அரசுக்கு தண்டனை நடவடிக்கைகள் மூலம் பாடம் புகட்ட முடியாது. அதில் பிரிட்டனுக்கு நம்பிக்கை இல்லை.

இப்படி தட்சர் கூறினார். (இ-ஒ)

## அமெரிக்கா தயாரில்லை

வாஷிங்டன் ஜூலை 23

இன வெறி கொண்ட தென் ஆபிரிக்க அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா தயாராக இல்லை

அமெரிக்க ஜனாதிபதி றேகன் தெரிவித்த கருத்து இதுவாகும். (இ-ஒ)

## வெளி உலகில்

### ஜெயில்சிங் பார்வையிட்டார்

நேபாளம் சென்றுள்ள இந்திய ஜனாதிபதி ஜானி ஜெயில்சிங் பல முக்கியமான இடங்களைப் பார்வையிட்டார். இந்திய இராணுவத்தின் கூர்க்காகள் ஆற்றிய முக்கிய பணிகள் பற்றியும் அவர் பாராட்டிப் பேசினார்.

★

### மசோதா நிறைவேறியது

இந்தியாவில் சட்டவிரோத மின்பாவனைக்குத் தண்டனையாக 5,000 ரூபாவும் அல்லது 3 வருட சிறைத்தண்டனையும் என்ற மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

•

### பகிஷ்கரிப்பு - 33

எடின்பரோவில் இன்று காமன்வெல்த் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின்றன. அதைப் புறக்கணிப்பதாக இதுவரை 33 நாடுகள் அறிவித்துள்ளன.

★

### யூனியன் கார்பைட் விற்பனைக்கு வருகிறது

பல தேசக்கம்பனியான யூனியன் கார்பைட் நிறுவனம் தமது விவசாயப் பிரிவை விற்றுவிடத் தீர்மானித்துள்ளது.

★

### இன ஒதுக்கல் கருத்தரங்கு

இன ஒதுக்கல் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்காக இரண்டுநாள் கருத்தரங்கு புதுடில்லியில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

### புதிய மந்திரிசபை

ஜப்பானின் பிரதமர் நாகஸோனி தமது மந்திரிசபையை அறிவித்தார்.

★

### எர்ஷாட் கொழும்பில்

பங்களாதேஷ் ஜனாதிபதி எர்சாட் இன்று வியாழக்கிழமை கொழும்பு வருவார்.

★

### தடுப்புக் காவலில்

தாய்லாந்தில் விசா நீடிப்பு அனுமதி பெறுமல் தங்கியிருந்த முன்னாள் வியட்நாமிய உயர் ஸ்தானிகர் ஒருவரின் மனைவி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

★

### மறுபரிசிலனை

காமன்வெல்த் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிக்கும் நாடுகள் அதிகரித்து வருவதால், தென் ஆபிரிக்கா மீதான தனது கொள்கையை பிரிட்டன் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. பாப்ஹோல் கருத்து வெளியிட்டார்.

★

### பயணம் வெற்றி

எகிப்தின் ஜனாதிபதி முபாரக் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்ட பொருளாதார ஆபிவிருத்திக்கான விஜயம் மிகுந்த வெற்றியளித்துள்ளதாக கருத்து வெளியிட்டுள்ளார்.

## வித்தாரம்

என்ன முரளித் தம்பி, துலையாலை வாறுய்? வீடியோவிலை படம் பாத்திட்டு வாறியோ! அதை மட்டும் மறந்திடாதையுங்கோ. உந்த இளம் வயதிலை எத்தினை வேலை செய்ய வேண்டிய காலம் உப்பிடியே நேரத்தைப் பழுதாக்கிறியளே

ஆசை அருமைக்கு கிழமையிலை இரண்டொரு நாட்களிலை படம் பாக்கலாம். கூடாது எண்டு சொல்லயில்லை.

புத்தகங்களை, நல்ல அறிவு நூல்களாய், எங்கடை சரித்திரத்தைச் சொல்லுகிற புத்தகங்களை, விஞ்ஞான உலகம் முன்னேறி வாறதைப் பற்றிச் சொல்லுற புத்தகங்களை, பெரிய அறிஞர், அரசியல்வாதியளின்ரை வாழ்க்கை வரலாறுகளைப் படிச்சு அறிவைப் பெருக்கப் பாருங்கோ. நெடுக விடியோதான் தஞ்சம் எண்டு இராதையுங்கோ.

பள்ளிக்கூடத்திலையும், ரியூட்டரியிலையும் வெறும் நோட்சைப் படிச்சுச் சோதனை பாஸ் பண்ணினதோடை படிப்பு முடிஞ்சுது எண்டு நினையாதையுங்கோ... கற்றது கைமண்ணளவு கல்லாதது கடல் அளவு தம்பி!

சரி படம் எண்டதும் உவர் விஜேயைப் பற்றித் தான் சொல்ல வேணும் போலை இருக்குது.

அவர் நடிகர். சிங்கள ரசிகர்களின் அபிமான நடிகராய்த் தெரிவு செய்யப்பட்டு போன கிழமை பரிசும் வாங்கினர்.

நடிகர்மார் 'டுப்ளிக்கேட்' வேஷம் போடுற திலை கெட்டிக்காரர். அரசியலிலையும் அவை 'டுப்ளிக்கேட்' பண்ணுவினம்.

உவர் விஜே நேரத்துக்கு ஒருவேஷம் போடுறார். தன்ரை தொழில் கெட்டித்தனத்தை அரசியலிலையும் காட்டி வாறார்.

சென்னையிலை போய் ஒண்டைக் கதைக்கிறார். இஞ்சை வந்து ஒண்டைச் சொல்லுறார்.

தமிழற்றை குறைகளைத் தீர்க்கவேணும் என்கிறார். பிறகு ஒருமொழி மாநிலம் சரிவராது. அதை என்னெண்டு சிங்கள மக்களைக்கொண்டு ஏற்கச் செய்யிறது எண்டுக் கேட்கிறார்.

போராளியள் இலட்சியத்துக்காகப் பாடுபடுறவை எண்டு ஒருக்காச் சொல்லுகிறார். பிறகு அவை ஆயுதத்தைக் கீழ வைக்கவேணும் எண்டு அதிகாரத் தொனியிலை பேசுகிறார். சிலவேளை 'சென்ஸ்' பேசுறார். சிலவேளை சுத்த 'நொன் சென்ஸ்' பேசுகிறார். அரசியல் 'டுப்ளிகேட்' தனத்தைப் பாத்தியே!

தான் ஜே. ஆரின் ஏஜண்ட் இல்லை எண்டு அடிக்கடி தானகவே சொல்லிக்கொள்ளுறார். தன்னைச் சிறையிலை போட்ட ஜனாதிபதி எப்படி நண்பராக முடியும் எண்டு கேட்கிறார்.

சினிமாவிலை வில்லனே பல சந்தர்ப்பங்களிலை கதாநாயகன், நண்பன் ஆவதும் உண்டுதானே!

★ ★ ★

நேற்றைக்கு ஒரு கடிதம் வந்திது. யாழ்ப்பாணத் தமிழர் கதிர்காமம் போகமுடியாத நிலை இருப்பதால் நல்லூரில் வேல் விழா நடத்தவேணும் எண்ட தோரணையில அது இருந்தது. அந்த ஆடிவேல் விழா முருகன் திறம் பேசும் சொற்போர் விழாவாக இருக்கவேண்டும் என்றும் அந்த அன்பர் விரும்புகிறார். ஒவ்வொருவருக்கும் என்னென்ன விருப்பங்கள்!

நல்லூர் விழாக்காலமும் நெருங்குதெல்லே அடுத்தமாசம் பதினைராம் திகதி நல்லூரானின் கொடியேத்தம்'

திண்ணைப் பேச்சு

# தமிழ்மொழி மாநில அமைப்பில் முஸ்லிம்கள் நிலை என்ன?

## பேட்டியில் அமிர்தலிங்கம்

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் கொழும்பு ஆங்கில நாளிதழ் 'டெய்லி நியூஸ்'ஸுக்கு அளித்த பேட்டியின் இரண்டாவது பகுதி இன்று இங்கு பிரசுரமாகின்றது. பேட்டி கண்டவர்: வி. சபாரத்தினம்.

கேள்வி: தமிழ்பேசும் பெரும்பான்மைப் பகுதிகள் எவை என்பது பிரதேச உதவி அரச அதிபர் மட்டத்தில் தீர்மானிக்கப்படவேண்டுமா? அல்லது கிராம மட்டத்தில் தீர்மானிக்கப்பட வேண்டுமா?

அமிர்: கிராம மட்டத்திற்குச் சென்று தீர்மானிக்கப்பட வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். கிராமங்களுக்கிடையேயான தொடர்பையும் பொருளாதார அமைப்பையும் பாதிக்காத வண்ணம் இத்தெரிவுகள் இடம்பெற வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து எடுக்க வேண்டிய தமிழ்ப்பேசும் அல்லாத பகுதிகளைப் பிரித்தே ஆகவேண்டும்

நாம் எடுக்கும் புதிய நிலைப்பாடு இது அல்ல. 1983லும் இதைத்தான் நாம் புதுடில்லியில் வைத்துத் தெரிவித்தோம்.

கேள்வி: அப்படியானுல் முஸ்லிம் கிராமங்களின் நிலை என்ன?

அமிர்: தமிழ்ப் பகுதிகள் மத்தியில் அமைந்துள்ள முஸ்லிம் கிராம மக்கள் தமிழர் பகுதிகளுடன் சேர்ந்து வாழவே விரும்புவர்.

முஸ்லிம்கள் தாங்கள் பிரிந்துவாழ்வதை விரும்பவில்லை.

திருமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள முஸ்லிம்கள் பிரிவதை விரும்பாதவர்கள் அம்பாறையில் சில பகுதியில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் அவர்களுக்குத் தங்கள் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்க உரிமை உண்டு.

ஆனால் ஏனைய முஸ்லிம்களுடன் சேர்ந்துவாழவே அம்பாறை முஸ்லிம்கள் விரும்புவர். நான் ஏற்கவே சொன்னது போல தொடர்புகள் பாதிக்கப்படா வண்ணம் எல்லை நிர்ணயம் இடம்பெற வேண்டும்.

கேள்வி: இவை, பேச்சுக்களின்போது ஆராயப் பட்டனவா?

அமிர்: இல்லை. இந்த விவகாரங்களை எல்லாம் ஆராய நாம் தொடங்கவில்லை ஐக்கிய தமிழ் அமைப்பு ஒன்று தேவை என்ற எமது அடிப்படை நிலைப்பாட்டை அரசிடம் முன்வைத்துள்ளோம். அதற்கு மேல் நாம் இன்னும் ஆராயத் தொடங்கவில்லை.

கேள்வி: ஐக்கிய தமிழ் மொழி அமைப்பு ஒன்று குறித்துக் கூட்டணிக்கும் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இடையே அடிப்படை உடன்பாடு ஏற்பட்டுள்ளது என முன்னர் கூறினீர்கள். அது சரியா?

அமிர்: அடிப்படை உடன்பாடு காணப்பட்டது என்ருல் கூற முடியாது.

எந்தத் தீர்வும் தமிழ் மொழி மாநில அமைப்பின் கீழ்தான் காணப்படவேண்டும் என்பது குறித்து கூட்டணியும் போராளிகளும் ஒரே கருத்துக் கொண்டவர்களாக உள்ளனர். இருதரப்பினரும் ஒரே கருத்துக்களைக் கொண்ட அடிப்படை விஷயங்களில் இதுவும் ஒன்று.

கேள்வி: ...

...கும் போராளிகளும் ஒரே அபிப்பிராயங்களைக் கொண்ட ஏனைய விஷயங்கள் எவை?

அமிர்: காணி உபயோகம், காணிக் குடியமர்வு விஷயங்கள் பற்றியது. காணிக் குடியமர்வு, காணி உபயோகம் சம்பந்தமான அதிகாரப் பகிர்வு சுயாட்சி அமைப்புக்கு வழங்கப்படவேண்டும் என்று நாமும் போராளிகளும் உடன்பட்டுள்ளோம்.

கேள்வி: காணிக் குடியமர்வு விஷயத்தில் அரசுக்கும் கூட்டணிக்கும் இடைவெளி இருப்பதாகக் கூறப்படுகிறதே.

அமிர்: அதுபற்றிக் கூறமுடியாதுள்ளது. அந்த விஷயம் பற்றி இன்னும் பேசப்படுகின்றது.

கேள்வி: சட்டம் — ஒழுங்கு பற்றிய விஷயத்தில் கூட்டணியினருக்கும் போராளிகளுக்கும் இடையே கருத்து ஒற்றுமை ஏற்பட்டுள்ளதா?

அமிர்: நாமும் போராளிகளும் பொது நிலைப்பாடு ஒன்றைக் கண்ட மூன்ருவது விஷயம் இதுதான் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரம் முதலமைச்சர்களின் கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்பதே கூட்டணியின் நிலை.

கேள்வி: சட்டம் — ஒழுங்கு பற்றியும் வடக்கு- கிழக்கு நிலைமை பற்றியும் நீங்கள் ஜனாதிபதியை பிரத்தியேகமாக சந்தித்துப் பேசினீர்கள்.

அமிர்: ஆம்! வியாழன் வெள்ளிக்கிழமைகளில் நடந்த பேச்சுக்களின் ஆரம்பத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் ஆயுதப் படையினராலும் சிங்கள ஊர்காவல் படையினராலும் கொல்லப்படுவது பற்றி ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னோம்.

இந்த நிலைமை நீடித்தால் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்படும் என்றும் அவரிடம் சொன்னோம்.

சில சிங்களவர்களைப் போராளிகள் கொன்றனர் என்று ஜனாதிபதி சொன்னார்.

அப்பாவி மக்களைக் கொல்வதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி சொன்னார். தமிழர் என்றாலும் சரி, சிங்களவர் என்றாலும் சரி அப்பாவிகள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

(தொடரும்)

## குடிமனைப் பகுதிக்குள் நுழைந்த சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வயாவிளான் மகாவித்தியாலய மினி முகாமிலிருந்து சிப்பாய்கள் சத்தமின்றி குடிமனைகளுள் புகுந்தனர்.

இச்சம்பவம் சென்ற இங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் நடந்தது.

வயாவிளான் ஆலடி வீதியால் உட்புகுந்த சிப்பாய்கள் தென் மூலைப் பகுதியினூடாகச் சென்றனர்.

அங்கு தோட்டத்தில் நின்ற இரு 16 வயது இளைஞர்களைப் பிடித்து தம்முடன் சிறிது நேரம் வைத்திருந்து விட்டுத் துரத்தி விட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மேலும் பல குடும்பங்களும் அப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்துள்ளன. (இ-5)

## 3 தினங்களுக்கு உள்ளூர் தொலைக்காட்சிச் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை. 24

இம்மாதம் 25 முதல் 27 வரை-மூன்று தினங்களுக்கு சகல உள்ளூர் தொலைக்காட்சி சேவைகளையும் இடைநிறுத்தும்படி உள்ளூர் (தனியார்) தொலைக்காட்சிச் சேவையாளர்களை யாழ் ஒலி-ஒளி ஒன்றியம் கேட்டுள்ளது.

1983 ஜூலை வன்செயலைக் கண்டிக்குமுகமாகவும் வெலிக்கடைச் சிறையில் மரணித்த போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையிலும் தனியார் தொலைக்காட்சி சேவைகள் மூன்று தினங்களுக்கு நிறுத்தப் படவேண்டும்.

இப்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)



## பொய்யாமொழி

குறள்:
தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்:
ஒப்புரவாளன் தன்னுல் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருள் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

# உதயன்

24 07 1986 வியாழக்கிழமை

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

# கூட்டணியினரும் போராளிகளும் புதுடில்லியில் பேசுவர்

## இலங்கை அரசுடன் பேசிய விவரங்கள் ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஐந்து தமிழ்ப் போராளிகள் குழுக்களின் தலைவர்களும், கூட்டணித் தலைவர்களும் புதுடில்லியில் இந்த வாரத்தில் சந்தித்துப் பேசுவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்களின் விவரம் குறித்து இரு தரப்பாரும் ஆராய்வர் எனத் தெரிய வருகிறது.

இதன் பொருட்டு போராளிகள் குழுக்களின் தலைவர்கள், புதுடில்லி வருமாறு இந்திய அரசு அதிகாரிகளால் அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று அல்லது நாளை புதுடில்லி செல்வார்கள் என அறியப்படுகிறது.

இதனிடையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இன்று மாலை 4 மணியளவில் கொழும்பில் இருந்து இந்தியா புறப்படுகின்றனர்.

கொழும்பில் நடந்த பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றி கூட்டணித் தலைவர்கள் போராளித் தலைவர்களுக்கு விளக்கிச் சொல்வர்.

இதனை கூட்டணித் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர்கள் நேராக புதுடில்லி செல்வார்களா அல்லது சென்னையில் தரித்துச் செல்வார்களா? என்பது நேற்று இரவு வரை நிச்சயிக்கப்படவில்லை.

(அ-எ-2)

## ஏழு முஸ்லிம்கள் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 24

கடந்த மாதம் 24 ஆம் திகதி யாழ் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சு—கொலைச் சம்பவத்தின் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஏனைய ஏழு முஸ்லிம் நபர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களுடன் கைதான இரண்டு பேருக்கு விடுதலைப் புலிகள் நேற்று மரணதண்டனை வழங்கியதை அடுத்து முஸ்லிம் மக்கள் சிலர் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

ஒஸ்மானியாக் கல்லூரியில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் ஆனைத் வீதி, பி ஏ தம்பி ஒழுங்கை, கே. கே எஸ் வீதியூடாகச் சென்று நாச்சிமார் கோயிலடியை அடைந்தது.

இந்த ஊர்வலத்தில் சுமார் முன்னூறு பேர் வரையில் கலந்து கொண்டனர்.

நாச்சிமார் கோயிலடியை அடைந்த இவர்கள் அங்கு உள்ள முகாம் ஒன்றுக்கு அருகில் சென்று கைதானவர்களை விடுதலை செய்யும்படி கேட்டனர்.

இதனையடுத்து அந்த ஏழு பேரும் அவர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டனர். (உ-10)

## தீவுப்பகுதியில் எதிர்ப்பு நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தீவுப்பகுதியில் நாளை எதிர்ப்பு நாள் கூட்டங்கள் நடத்த தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு தீர்மானித்துள்ளது.

நாரந்தனை, வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களில் காலை 9 மணிக்கு இக்கூட்டங்கள் நடைபெறும். (உ-எ)

## நொச்சிமோட்டை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடையாகவும் நான்கு வாகனங்களிலும் வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியால் வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது நாம் தரைக் கண்ணி வெடித் தாக்குதல் நிகழ்த்தியதில் நடைபவனியாக வந்த சிப்பாய்கள் பலர் கொல்லப்பட்டனர்.

ஏராளமானோர் பலத்த காயமடைந்தனர்.

எம்முடன் தாக்குதல் நடத்த இயலாத நிலையில் சிப்பாய்கள் மீண்டும் முகாம் திரும்பினர்.

இத் தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புக்களும் இல்லை.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## வவுனியாவில் இருவருக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 24

வவுனியாவில் இரண்டு பேருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்றுமரண தண்டனை வழங்கினர்

என். தியாகலிங்கம், கோவித்தம்பி ஆகிய இரண்டு பேருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இருவரும் போராளிகளைக் காட்டிக் கொடுத்தவர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது (உ)

## தமிழர்கள் பயமுறுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மாமடுவ நிலக்கண்ணி வெடித் தாக்குதலைத் தொடர்ந்து வவுனியா—ஹொரவப்பொத்தானை வீதியில் 2 ஆம் கட்டையில் வசிக்கும் தமிழர்கள் பெரும்பான்மை இனத்தவரால் பயமுறுத்தப்பட்டனர்.

இச்சம்பந்தமான முறைப்பாடு கிடைத்ததைத் தொடர்ந்து, வவுனியா உதவிப் பொலீஸ் அதிபர் அந்த இடத்துக்கு விரைந்து சென்று பயமுறுத்தியவர்களை எச்சரிக்கை செய்தார் என்று தெரிய வருகின்றது.

அப்பகுதியில் இருக்கும் பெரும்பான்மை இனத்தவர் மாலை 6 மணிக்குப் பின்னர் வீதியில் நடமாடக் கூடாது என்றும் பொலீஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (உ-எ-6)

## OBITUARY NOTICE

**THAMBOO KANAGASINGHAM**
(Advocate)

Thamboo Kanagasingham. Advocate. Beloved husband of Ratnambal, father of Yoheesan (Norway), Sathiamanoharan (Bambalapitiya Hindu College) Funeral arrangements will be notified later. No. 4, Vivekananda Avenue, Wellawatta.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. வெளியீட்டு திகதி 24—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 NEWS 86.

## பிரசா உரிமை வழங்கும் வேலை துரிதம்

சென்னை, ஜூலை 23

நாடற்ற இந்தியர்களுக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்கும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

6 லட்சம் இந்தியர் பிரசா உரிமை பெறுவர்

இப்படி அமைச்சர் தொண்டமான் சென்னையில் தெரிவித்தார். (உ-எ)

## உதைபந்தாட்ட வீரர்கள்காயம்

யாழ்ப்பாணம் ஜூலை 24

செவ்வாய்க்கிழமை மாலை கைலப்பிலை முடிந்த யாழ் இந்து—மகாஜனக் கல்லூரி உதைபந்தாட்டப் போட்டியின்போது மகாஜனக் கல்லூரி வீரர்கள் இருவரும் காயமடைந்தனர்

உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே விளையாட்டின் மத்தியில் அவர்கள் காயமடைந்தனர்.

ஆட்டம் குழம்பிய பின்னர் நடைபெற்ற சம்பவங்களின் போதே யாழ். இந்து வீரர் ஒருவரும், மாணவர் ஒருவரும், மைதான உதவியாளரும் காயமடைந்தனர்.

## ரூபவாஹினி, வானொலி செய்தி பற்றி அறிக்கை

### முஸ்லிம் இணக்க சபை விடுந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 24

நேற்று மாலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 6 மணி செய்தியிலும், ரூபவாஹினியின் 6 30 மணி செய்தியிலும் வெளியான தகவல் ஒன்று குறித்து யாழ் முஸ்லிம் இணக்க சபை விளக்க அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது

பிரிவினைவாதிகளினால் இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் 24 ஆம் திகதி முஸ்லிம் பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றின் போது கிரனேட் வீச்சுக்கு இலக்காகி மூன்று முஸ்லிம்கள் பலியானதும்—

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களால் 8 பேருக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதும்—

பின்னர் விடுதலைப் புலிகளினால் சிலர் கைது செய்யப்பட்டதும் தெரிந்த விடயமே

விசாரணையின் பின் ஒன்பது பேரை புலிகள் கடந்த 22 ஆம் திகதி வரை தடுத்து வைத்திருந்தனர்.

22 ஆம் திகதியன்று புலிகளுக்கு எதிராக பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால், ஊர்வலம் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கும் பின்னரே இரு முஸ்லிம்களை சுட்டுக்கொல்ல வேண்டிய நிலை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.

நேற்று முஸ்லிம் பொது மக்கள் 22 ஆம் திகதி நடைபெற்ற தீவைப்பு, வீடுகள், கடைகள் உடைப்புகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தரும்படியும் —

மிகுதி 7 பேரையும் விடுதலை செய்யும்படியும் கோரிய புலிகளுடைய முகாம் நோக்கி "அல்லாஹ் அக்பர்" (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று முழக்கத்துடன் அமைதியான முறையில் சென்றனரே ஒழிய எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை.

மேலும் முஸ்லிம் பொது மக்களினால் விடப்பட்ட நான்கு கோரிக்கைகளில் விடுதலைப் புலிகளினால் மூன்று நேற்றே நிறைவேற்றப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

—இப்படி இணக்கசபைத் தலைவர் ஜனாப். எம். ஏ ஸி. மூபீன் செயலாளர் ஜனாப். எம் முசாகுல் ஹமீட் ஆகியோரினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

## போராளி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னதாவது:

தமிழ்ப் போராளிகள் தான் தமிழர் அரசியலில் இன்று முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களுடன் பேசித்தான் இனப் பிரச்சினைக்கு அரசு தீர்வு காண முன்வரவேண்டும்.

கூட்டணித் தலைவர்களுடன் பேசுவது காலத்தை விரயம் செய்யும் வேலையாகும்.

உடனடியாக தமிழ்ப் போராளிகளுடன் அரசு பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் அவர்களுடன் பேசாமல் விடுவது அரசு விடும் மா தவறாகும் — இப்படி திரு. குமார் பொன்னம்பலம் கூறினார்.

### சொற்றொடருக்கு எதிர்ப்பு

இதைத் தொடர்ந்து போராளிகளையும் பேச்சுகளைச் சமர்ப்பிக்கக் கோரும் தீர்மானத்தைத் தயாரிப்பதில் மாநாட்டு உறுப்பினர் ஈடுபட்டனர்.

தீர்மானத்தில் ஆயுதம் தாங்கிய ஈழம் அமைப்புக்களை கோருவது என்ற சொற்றொடர் பாவிக்கப் படுவதை திரு குமார் பொன்னம்பலம் பலமாக எதிர்த்தார்

தமிழ்ப் போராளிகள் என்று அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று திரு. குமார் பொன்னம்பலம் வாதாடினார்.

திரு. பொன்னம்பலத்தின் வாதத்தை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், நவசமசமாஜ கட்சி ஆகியன ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் ஆயுதம்தாங்

## தமிழ் அமைப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு;

1 நிதி பற்றாக்குறை காரணமாக மாகாண சபைகள் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு வராமல் இருக்கக் கூடியதாக இச்சபைகளுக்கு போதிய நிதி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் உருவாகும் நிலைமைகளைப் பொறுத்து அரசியல்கட்சிகள் மாநாட்டை ஜனாதிபதி மீண்டும் கூட்ட வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களை ஆகிய இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸும் ஆதரிக்கவில்லை.

(உ-எ)

## வவுனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளைத் திறக்கும்படி பணித்தனர். பின்னர் கடைகள் திறக்கப்பட்டனவாயினும் சிறிது நேரத்தில் மீண்டும் கடைகள் அடைக்கப்பட்டன.

சம்பவம் நடந்தவேளையில் அப்பகுதியில் இராணுவத்தினர் துண்டுப் பிரசுரம் ஒன்று விநியோகித்ததாகக்கூறப் படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்ட பார்சல் குண்டு ஒன்று வெடித்ததாகவும் ... விக்கப்பட்டது (உ-எ-6)

## இரு முஸ்லிம்களுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தின்போது இவர்கள் இருவருமே பயங்கர ஆயுதங்கள், கைக்குண்டுகள் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணதண்டனைக்குள்ளான முகமட் ஜலீல் என்பவர் நாச்சிக்குடா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தவர்.

மரண தண்டனை வழங்கப்பட்ட இருவரது சடலங்களும் உடனடியாகவே அவர்களது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று மாலை அடக்கம் செய்யப்பட்டன.

இந்த இருவரும் இராணுவத்திடமிருந்து பயங்கர ஆயுதங்களைப் பெற்று சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டனர் எனப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

இய ஈழம் அமைப்புக்கள் என்ற சொற்றொடரே தீர்மானத்தில் பாவிக்கப் பட்டது.

... பதி திரு. ஜெ ஆர். ஜெயவர்த்தனா தலைமை வகித்தார். (அ-எ)

## சென் ஹென்றிஸ் வெற்றி

—அலுவலக விளையாட்டுச் செய்தியாளர்—

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் யாழ் மாவட்ட பாடசாலை மூன்றும் பிரிவு அணிகளுக்கிடையேயான அரை இறுதி ஆட்டம் ஒன்றில் இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி அணி பனல்டி உதைகள் மூலம் வெற்றி பெற்றது.

இந்த அணி யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி அணியை தோற்கடித்ததன் மூலம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி உள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் செவ்வாய் நடைபெற்ற இந்த ஆட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்தபோது இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டிருந்தன

அதன் பின்னர் வழங்கப்பட்ட மேலதிக 10 நிமிட ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் போடத் தவறின.

இறுதியில் பனல்டி உதைகள் மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப் பட்டது.

முதலில் வழங்கப்பட்ட 5 பனல்டி உதைகளில் இரு அணிகளும் தலா இரண்டு கோல் போட்டன.

அடுத்து வழங்கப்பட்ட பனல்டி உதை ஒன்றை இரு அணிகளும் கோட்டை விட்டன.

இறுதியாக வழங்கப்பட்ட பனல்டி உதையை ஒஸ்மானியா அணி தவறவிட சென் ஹென்றிஸ் அணி அந்த உதையில் கோல் ஒன்றைப் போட்டு வெற்றியைத் தனதாக்கியது. (உ-7)

## உடுவில் மகளிர் சாம்பியன்



கல்வித் திணைக்களத்தினால் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் நடத்தப்பட்ட பதினேழு வயதுப் பிரிவு கைப்பந்தாட்டப்போட்டியில் சாம்பியனாகத் தெரிவுபட்ட உடுவில் மகளிர் கல்லூரி அணியினைப் படத்தில் காணலாம் இடமிருந்து வலம்: செல்வி சுவர்ணா இராசதுரை, செல்வி ஜெயனி கந்தசாமி செல்வி அபிராமி உருத்திரராசா, செல்வி வனஜா செல்வநாயகம், செல்வி சோபனா பாலசுப்பிரமணியம், செல்வி ஜானகி தருமானந்தன், செல்வி புஷ்பலதா இரத்னம் — (உ-9)

## வடக்கில் நாளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்து, இதன் மூலம் இந்த அரசு நடத்திவரும் இனவெறிக் கொலைகளை உலக அரங்கிற்கும் தெரிவிக்கும் வண்ணம் நாளை சகல வர்த்தகர்களும் பூரண கடையடைப்புச் செய்து, அன்றைய தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு யாழ் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இனப்படுகொலைக்கு எதிராக ஒற்றுமையுடன் செயற்படுவோம். — இப்படி அறிக்கை ஒன்றின் மூலம் சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

நாளை நடைபெறும் எதிர்ப்புத் தினத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் பங்கு பற்றுகிறது.

இதுசம்பந்தமாக யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நாளை வெள்ளிக்கிழமை வட பிரதேச தொழிற் சங்கங்களின் இணைப்புக் குழுவின் போராட்ட வழிமுறைக்கு எமது ஆதரவை நல்குவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்ப்புத் தினத்துக்கு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கமும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது.

### ஆசிரியர் சங்கம்

இதே சமயம் இந்த எதிர்ப்பு தினத்தில் ஆசிரியர்கள் அனைவரையும் பங்கு பற்றும்படி வட மாகாண ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது

இது சம்பந்தமாக சங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு தனது வர்க்க நலன்களை நிலைநிறுத்துவதற்காக பேரினவாதப் போக்கைப் பின்பற்றி வருகிறது.

பாதுகாப்புப்படைகளையும் குண்டர்களையும் பயன்படுத்தி தமிழ்பேசும் மக்களை கொன்று குவித்து வருகிறது. மக்கள் உயிர் துச்சமாகக் கணிக்கப்படுகின்றது.

எனவே ஆசிரியர்கள் அனைவரும் இத்தினத்தில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து தொகுதிதோறும் கண்டனக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

இவ்வாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் அறிக்கையில் மேலும் கேட்டுள்ளது. (இ-உ-எ-10)

## அரசியல் குழு ஆராயும்

கொழும்பு, ஜூலை 24

அரசு-கூட்டணி பேச்சுக்களின் பெறுபேறுகளை கூட்டணி அரசியல் குழு (பொலிற்பீரோ) ஆராயும்

(அ-எ-2)

● உயிர் காக்கும் சஞ்சீவி ●

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கி உங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கிறது

இரத்ததானம் செய்யுங்கள்!

விரைந்து செய்வீர்!!

தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org